
# தாய் நிலம்

## கவித்துளிகள்



மேழிக்குமரன்

தமிழ் எழுத்தாளர் சங்கம் - யேர்மனி

# தாய்நிலம்

## (கவித்துளிகள்)

MANN (ERDE) MAGAZIN
V. Sivarajah
Am Windhövel 18a
47249 Duisburg
Germany

மேழிக்குமரன்
(தமிழ்மணி.கே.கே.அருந்தவராஜா)

வெளியீடு
தமிழ் எழுத்தாளர் சங்கம் - யேர்மனி

## நூல்தரவு

### காலடிச்சுவடுகள்

| | | |
|---|---|---|
| நூலாக்கம் | : | மேழிக்குமரன் |
| பதிப்பு | : | முதலாம் பதிப்பு 2012 |
| பதிப்புரிமை | : | தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜேர்மனி |
| வெளியீடு | : | தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜேர்மனி |
| அச்சுப்பதிப்பு | : | கீதா பப்ளிக்கேசன். கொழும்பு - 13. இலங்கை |
| முன்மட்டை வடிவமைப்பு | : | லோ.அம்பரீசன். பிரான்ஸ் |
| பின் மட்டை வடிவமைப்பு | : | லோ.அம்பரீசன். பிரான்ஸ் |
| நூல் வடிவமைப்பு | : | மேழிக்குமரன் |

### Thainilam

| | | |
|---|---|---|
| Erste Auflage | : | 2012 |
| Copyright | : | Tamilischer Schriftsteller Verein - Germany |
| Herausgeber | : | Tamilischer Schriftsteller Verein – Germany |
| Originaltextcopyright | : | Schriftstellervereinigung Mezhikkumaran |
| Umschlaggestaltung | : | Herr.L.Ambareesan, Franconville, France |
| Druck und Bindung | : | Keethaa Publication, colombo -13, Srilanka |


தொடர்புகளுக்கு:


V.Sivarajah
Am Windhoevel – 18a
47249 Duisburg, Germany.
Tel: 0203 8073898
mann_erde_sivarajah@hotmail.com

K.K.Arunthavarajah
P.Fach. 120116
59485 Soest, Germany.
Tel: 02921 343137 E-Mail:
E.Mail:arunthavarajah@gmail.com

## விழிக்க வைக்கும் வார்த்தை

மேழிக்குமரனின் ஆழக் கவித்துளிகள் விழிதிறக்க வழிசொல்லும் வகையானவை. எழிலானவை, வழிதிறக்க வார்த்தை தரும் எளிமையானவை

ஆழிசூழ் உலகமெலாம் பரந்திருக்கும் பலதும் மேழிக்குமரனின் கவித்துளியாய் தாய்நிலத்தில் விதைக்கப்பட்டுள்ளது.

உள்ளத்து உணர்வை உரைத்து நிற்பது கவிதை அதை உணர்த்தி நிற்பது இவரின் தாய்நிலம் கவித்துளிகள்.

யார் இந்த மேழிக்குமரன்?

ஏர் பிடித்து பாருக்கு அன்னமிடும் வழித்தோன்றல் ஆகையினால் மேழி எனச் சூடிக் கொண்டாரோ?

இல்லை சொல்லேர் உழவராய் வாழும் புலவர்கள் பரந்திருக்கும் யாழ் இளவாலை ஊற்றாகி, நாற்றாகியதால் விளைத்துக் கொண்டாரோ?

எதுவானாலும் சாலப்பொருந்தும் புனைபெயர் மேழிக்குமரன். இதற்குள்ளிருப்பவர் யாழ் இளவாலை காடிவளையைச் சேர்ந்த, புலம் பெயர்ந்து ஜேர்மனியில் வாழ்ந்திருக்கும் தமிழ்மணி கே.கே.அருந்தவராஜா அவர்கள்.

அவரின் கவிச் சிந்தனைத் துளியாய் இந்த தாய்நிலம், இதில் கவி துளித் துளியாய் விதைக்கப்பட்டு – அதுவே கருப் பொருளாய் அமைந்த தன்மையினால் மகாகவி பாரதி தன் கவிதையை அறிமுகம் செய்யும்போது கூறிய,

...சுவை புதிது
பொருள் புதிது
வளம் புதிது
சொல் புதிது
சோதிமிக்க நவ கவிதை

என்ற கவிதா இலக்கணம் இவர் கவித்துளிகளிலும் பரந்திருப்பதைப் பார்க்கக்கூடியவாறு உள்ளது.

தாய்நிலம் கவித்துளிகள் தொகுப்பில் சமூகம், சமயம், அரசியல், மொழி, கலாச்சாரம் எனப் பலதும் பரவிக்கிடக்கிறது. படிக்கும் ஒவ்வொருவரும் தன்நிலை உணரும் வண்ணம் வடித்திருக்கிறார்,

சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் பாங்கால், இக்கால புதுக்கவிதையாய் உள்ளத்துள் உடனே பதியும் பாங்காய் பல கவித்துளிகள் - அவற்றுள் ஒன்றாய், அம்மா எனும் தலைப்பில் உள்ள கவித்துளி

"பெரு நதியான
ஓவியம்
ஒரு சொல்லில்
ஒரு காவியம்
அது அம்மா"

மிகவும் அருமையாக 'அம்மா' என்ற அந்த அற்புத உறவின் உயர்வை எல்லோர்க்கும் விளங்கும் எளிமையான சொற்களால் விளங்கவைக்கிறார். தாய் தொடர்பாக பல தலைப்புகளில் கவித்துளி தரும் இவர் உயிர்மெய் எனும் தலைப்பில்,

"உயிரைத் தாங்கி
மெய்யை வளர்த்து
உயிர் மெய்யாக்கியதால்
அவள் அம்மா"

இவ்வாறு தமிழ் இலக்கணத்தை இலக்கியமாக்கி புதுக்கவிதை படைக்குமிவர் இதே சொற்களில் வேறு பொருளை வேறோர் தலைப்பில் தருகிறார், தமிழ் எனும் தலைப்பில் உயிரின் பிறப்பும் - தமிழ் எழுத்தின் பிறப்பும் எவ்வாறு ஒற்றுமை அடைகிறதென்பதைத் தெளித்துள்ளார்.

"உயிர்வந்து
மெய்யில் கலந்து
உயிர் மெய்யாவதே
தமிழும் பிறப்பும்"

மண், பெண், பொன் இவற்றால் விளையும் விடயங்களை துளித்துளியாய்த் தெளிக்கும் இவர் மண் விடுதலை, பெண் விடுதலை பற்றிப் பாடவும் தவறவில்லை. பூட்டு எனும் தலைப்பில் எழுதப்பட்ட கவித்துளியில்,

"பொன்னைப் பூட்டி வை
உன்னைப் பூட்டி வை
பெண்ணைப்
பூட்டி வைக்காதே"

என ஆண்களுக்குக்கூறி பெண்விடுதலை பேசுமிவர், பெண்ணுக்கும் கூறுகின்றார் இப்படி,

"ஆக்கும் திறனும் உண்டு

நாட்டைக்
காக்கும் திறனும் உண்டு
ஆண்கள்
தாக்கும் திறனை
எதிர்த்து முன்னேறு"

புதுமைப் பெண்ணாய் தன்னிறைவுடன் வாழ விழிக்கச் சொல்கிறார்.

சமூக அக்கறை கொண்ட ஒவ்வொருவரும் தமது அன்றாட வாழ்வில் பார்க்கும் விடயங்கள் பலவற்றிலும் மாற்றம் வேண்டும் என்று சிந்திக்கும் சிந்தனை இவரின் கவித்துளிகளில் பல இடங்களிலும் காணப்படுவதன் மூலம் இவர் தான் ஒரு சமூக சிந்தனையாளர் என்பதை நிரூபிக்கின்றார்.

"சேற்று வயலில்
நாற்று நடுபவரை
வேற்றுலக மனிதராய்
பார்ப்பதில்
மாற்றம் வேண்டும்"

மாற்றம் வேண்டும் எனும் தலைப்பில் சாதிக்கொடுமையைச் சாடுமிவர், மூடநம்பிக்கைகள் வடம்பிடிக்கும் விடயத்தையும் விளம்பிடத் தவறவில்லை. நம்பிக்கை என்னும் தலைப்பில்,

"விதியை விட்டு விட்டு
நம்பிக்கையில்
நம்பிக் கைவை
வாழ்க்கை இனிக்கும்"

என்று நம்பி கைவையுங்கள் எனத் தைரியமும் தருகின்றார். விஞ்ஞானமும் மெய்ஞானமும் விழிக்க வேண்டிய விடயங்களை கலந்து கவித்துளிகள் பலவற்றைத் தந்துள்ளார் இத்தொகுப்பில்,

"மரங்களை
வெட்டிப் போட்டு
ஓமகுண்டத்தில்
யாகம்
மழை வருவதற்காய்"

யாகம் எனும் தலைப்பில் இவ்வாறு கவித்துளி தருபவர் பகிடி எனும் தலைப்பில்

"ஒழுக்கத்தையும் அன்பையும்
தூர எறிந்து விட்டு.
அபிசேகமும், ஆராதனையும்
செய்து
பக்தன் என்று
பகிடி விடுகிறாய்"

சமயம் எனும் பெயரால் நடக்கும் சங்கடங்களை சரிசெய்யச் சொல்கிறார். எது மதம் என விளக்கம் தர வருபவர் மதம் என்னும் தலைப்பில் தெறித்த துளியில்,

மனிதனை மனிதனாய்
மதித்து
மகத்தான
சாதனைகள் புரியும்
மனிதமே
சிறந்த மதம்"

எனக் குறிப்பிடுகின்றார்.

நூலாசிரியர் புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாட்டில் வாழ்பவர் என்பதால், புலம் பெயர்ந்த எம்மக்கள், அவர்களின் புலம்பெயர் வாழ்வு முறை, அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், கலாச்சார ஒருங்கிணைவு – பிறழ்வு இவ்வாறு பல விடயங்களை ஆங்காங்கே துளித்துளியாய்த் தெளித்துள்ளார். புகலிடவாழ்வு என்னும் தலைப்பில் புலத்து வாழ்வின் உண்மைத் தன்மையைப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

"உதயமில்லா இரவுகளோடு
இதயமெல்லாம்
பாலைவனங்களாய்
புகலிட வாழ்வு
புரியாத புதிர்"

குறிப்பாய் புலம் பெயர்ந்து வாழும் எம்மவர் மட்டுமல்ல தாயகத்தில் இருப்பவர்களும் முதியோரான தமது தாய், தந்தையரைப் பராமரிக்கும் முறை தொடர்பாக கூறவருபவர்,

“குஞ்சுகளைப் பிரிந்த
விரக்தியுடன்
நெட்டுயிர்த்து விழியேங்கும்
பெற்றோரின்
திறந்த வெளிச்
சிறைச்சாலை
வயோதிபர் மடம்”

வயோதிபர் மடம் எனும் தலைப்பில் இவ்வாறு சொல்பவர், தாய்மை என்னும் தலைப்பில் கூறும் போது,

சிறகு முளைத்ததும்
பறந்து விடும் குஞ்சுக்கு
வாஞ்சையுடன்
இரைதேடும்
தாய்ப்பறவை”

என புலம்பெயர்வாழ் பெற்றோரை நினைக்கவைக்கிறார். தொடர்ந்து முதியோர் இல்லம் எனும் தலைப்பில்,

“பிஞ்சுகள்தானே
இவர்களென்றெண்ணிய
குஞ்சுகளால்
கொத்தி விரட்டப்பட்ட
கோழிகளின் கூடாரம்”

மனப்பொருத்தம் பார்க்காமல் தனப்பெருக்கம் பார்க்கும் நம்மவரின் சீதனக்கொடுமையினைச் சொல்லிட வருபவர்,

“தாரத்துக்கு ஆதாரம்
பொருளாதாரம்
என்றாகியதால்
கன்னிகள் எல்லாம்
கழியாமலே”

எனச் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் வித்துவம் பாராட்டுக்குரியது. தீக்குளிப்பு எனும் தலைப்பில் தீட்டிய கவித்துளியில்,

"மூன்று முறை
தீயைச் சுற்றியதால்
முப்பது வருடமாய்
அவனிடம்
தினம் தினம்
தீக்குளிக்கிறாள்"

எனக்கூறி தொடர்ந்து பொருத்தம் எனும் தலைப்பில்,

"பத்துப் பொருத்தம் இருந்தும்
மனம் பொருந்தா விட்டால்
அந்தச் சந்தோசங்களுக்கான
ஆயுள்தண்டனை ஆகிவிடும்
வாழ்க்கை"

என மனப்பொருத்தம் பார்க்கவேண்டியதன் யதார்த்தத் தன்மையைப் புரியவைக்கிறார்.

வள்ளுவர் கூறியாங்கு நாவினால் சுட்டவடு ஆறாது என்பதற்கு கொட்டுதல் எனும் தலைப்பில் இவர் தந்த கவித்துளியில்,

"கொடுக்கால் கொட்டுவது
தேள்
கொடுக்கில்லாமல்
கொட்டுவது
நாக்கு"

எனப் புதுக்கவிதை தீட்டுகிறார். அரசியல் கவித்துளிகள் ஆங்காங்கே தருமிவர் புதிய ஜனநாயகம் எனும் தலைப்பில்,

"பெரும்பான்மை
வாக்கெடுத்தவர்
எதிர்க்கட்சியாக
நிராகரிக்கப்பட்டவர்
கூட்டாட்சி செய்வதே
புதிய ஜனநாயகம்"

என்று, இன்று நாம் வாழும் சூழலில் உள்ள நிலைமையை உணரவைக்கிறார். தொடர்ந்து சுழற்சி என்னும் தலைப்பில் புது அந்தாதி ஒன்றையும் தருகின்றார்,

"மானுடம் காட்டுவது இலக்கியங்கள்
இலக்கியம் படைப்பது மனிதர்கள்
மனிதரின் அடையாளம் மனது
மனதின் வழிகாட்டல் அறிவு
அறிவு வளர்ச்சிக்குக் கல்வி
கல்வியின் பெறுமதி வாழ்க்கை
வாழ்க்கையின் நோக்கம் தேடல்
தேடலின் முடிவு மானுடம்"

மரணத்தை வென்று வாழும் மனிதர்கள் இருவரை இங்கே கவித்துளி ஆக்கியுள்ள இவர் நட்பு தொடர்பாகக் கூறவரும்போது,

"இன்பத்தில் பங்கெடுக்கும்
துன்பத்தில் தோள் கொடுக்கும்
என்பு தோல் வாழ்வில்
எதிர்பார்ப்பு இல்லாதது"

என நட்புக்கு வரைவிலக்கணம் வரைபவர் அறி என்னும் தலைப்பில் நட்பை எப்படி அறியவேண்டுமெனக் கூறுகிறார்.

"பொன்னைச்
சுட்டு அறி
மண்ணை
நட்டு அறி
நட்பை
பட்டு அறி"

தாய்நிலத்துக் கண்ணிவெடிகளின் நிலையை உணர்த்துவதன் மூலம் புதைக்கப்பட்ட பல விடயங்களையும் தோண்டப்பட்ட பல விடயங்களையும் எண்ணவைக்கிறார் கண்ணிவெடி என்னும் தலைப்பில்,

"போரின்போது
புதைப்பது
அமைதியின்போது
தோண்டுவது"

போலிகள் என்னும் தலைப்பில் அரசியல் பேசுமிவர்,

"ஒற்றுமை மாநாட்டில்
குத்து வெட்டு
சமாதானக் கூட்டத்தில்
புறா விருந்து
வெளியே வெள்ளைக்கொடி
உள்ளே ஆயுதங்கள்"

நல்லவர் என்னும் தலைப்பில் தந்துள்ள கவித்துளி காலத்தின் கண்ணாடி,

"வல்லவராய் தீயவர்
முழக்கமிட
நாடெங்கும் நடைப்பிணங்கள்
நல்லவர்
மௌனிகளாய்..."

இவ்வாறே நிலையாமை சொல்லவருபவர், வழி என்னும் தலைப்பில்

"ஒரு வழியாக வந்து
பல வழியாக
வாழ்ந்த நீ
போவதற்கு
ஒன்பது வழி"

சமூகம், சமயம், அரசியல், மொழி, விடுதலை, கலாசாரம் எனப் பல பக்கங்களையும் தனது கவித்துளியில் விதைத்துவிட்டிருக்கும் இவரின் முயற்சி அறுவடைவரை செல்ல ஆவன செய்ய வேண்டுகிறேன்.

செல்லத்துரை நாவரசன்
44, Uphall Road
Ilford, ESSEX I G 1 2J F
U.K

# எனது எண்ணத் துளிகள்

நான் படித்துப் பெற்றதும், அனுபவப்பட்டுத் தெரிந்ததுமான பட்டறிவு, பத்திரிகைகள், சஞ்சிகைகள், கணனி என நான் வாசித்துத் தெரிந்த புதினங்கள், தொலைக்காட்சி, சினிமா என் நான் பார்த்து இரசித்த செய்திகள், கதைக் கருவூலங்கள் என அவ்வப்போது என்னைப் பாதித்த விடயங்களை நான் கிறுக்கி வைத்தவைதான் இந்தத் தாய்நிலம் என்னும் கவிதைத் துளிகள்.

சுமார் இருநூற்றைம்பது கவித்துளிகளை இங்கு பதிவு செய்திருக்கிறேன். இவை பலவித இரசங்களைக் கொண்டவை. ஒவ்வொரு துளியும் வெவ்வேறு செய்திகளைச் சொல்லுகின்றன. அதில் தாய்மையும், காதலும், விடுதலையும், வாழ்க்கையுந்தான் பலவிடங்களில் வெவ்வேறு வடிவங்களில் வந்துள்ளன.

இவற்றை கைக்கூ கவிதைகளாகப் பதிவு செய்யலாமா என்று முயற்சித்தேன். அதன் இலக்கணத்துள் எனது துளிகள் ஒத்துப்போகவில்லை. ஆகவே கவித்துளிகள் ஆக்கியுள்ளேன்.

தமிழர்களின் கவிதை இலக்கியத்திற்கு இலக்கணம் கூறுவது யாப்பிலக்கணம். இதன் வழியில் இரண்டு வரிகள் குறள் என்றும், மூன்று வரிகள் சிந்தியல் என்றும், நான்கு வரிகள் வெண்பா என்றும் பெயர் பெற்றுள்ளன.

இதில் மூன்று வரிகளான சிந்தியல் கவிதைகளாக எழுதலாமா என்று முயற்சித்த போது அதன் இலக்கணமும் எனது கவிதைகளுக்கு ஒத்துப்போகவில்லை. இறுதியில் புதுக்கவிதை வடிவத்துள் கவித்துளிகளாக இவற்றைப் பதிவு செய்வது என்று முடிவு செய்து இவற்றை எழுதியுள்ளேன்.

சில வரிகளுக்குள் ஒரு செய்தியைச் சொல்லும் யுக்தி எனக்குப் புதிது என்றாலும் அவற்றை இயன்றவரை பதிவு செய்திருக்கிறேன். சில செய்திகள், சில படிப்பனைக்ள என்னைப் பலமாகப் பாதித்தன. அவற்றை நான் பதிவு செய்வதன்மூலம் எனது பாதிப்பை நான் உணர்ந்து கொண்டிருக்கின்றேன்.

இவற்றில் பல நான் அங்கங்கு இருந்து எடுத்துக் கொண்டவைதான். எனது கவித்துளிகளில் சில சந்தங்களுடன் கூடி வருகின்றன. சில கருத்துக்களை மையமாகக் கொண்டு வருகின்றன. சில சமகாலச் செய்திகளைத் தாங்கி வருகின்றன.

இந்நூலுக்கு அணிந்துரை எழுதி வழங்கிய பிரசவக்களத் தொகுப்பாளர் திரு.செல்லத்துரை நாவரசன் அவர்களுக்கும், பின்மட்டையை அலங்கரித்திருக்கும் கவிஞர்.கலைவாணி ஏகானந்தராஜா அவர்களுக்கும் எனது நன்றிகள்.

வெளிமட்டை வடிவமைப்பு செய்துதவிய லோ.அம்பரீசனுக்கும் (பிரான்ஸ்) , இந்நூலை அழகிய முறையில் வடிவமைத்து உதவிய கொழும்பு கீதா பதிப்பக இயக்குனர் திரு.வி.இராசேந்திரம் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இந்நூலை வெளியிட்டு உதவிய யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினருக்கு எனது நன்றிகள்.

இக்கவித்துளிகள் மீதான உங்கள் ஆரோக்கியமான பார்வையை எனக்கு எழுதுங்கள். அவை என்னை வளர்க்கப் பயன்படும்.

மேழிக்குமரன்

தமிழ்மணி.கே.கே.அருந்தவராஜா

Britischerweg -1, 59494 Soest, Germany.

விமர்சனங்களை அனுப்புவதற்கு:
rajah27@hotmail.com
அல்லது
V.sivarajah, Am Windhoevel -18a, 47249 Duisburg, Germany

# கவித்துளிகள்

## தாய்நிலம்

உலகப் பரப்பெங்கும்
பறந்து திரிந்தாலும்
பாய்போட்டுப் படுக்கச்
சுகம் தருவது
நமது
தாய்நிலம்

## தாயுமானவன்

அவளைச் சுமப்பதனால்
என் இதயம் கருப்பையாக
நானும் தாயுமானவன்

## தந்தை

பெரியவர் வயிற்றுக்காக
ஊருக்குப்
பால் ஊற்றுகிறார்
அவருக்கு
கஞ்சி ஊற்ற வேண்டிய
பிள்ளைகள்
வெளிநாட்டில்
உல்லாசமாக

## எஸ்.ஜி.தோழர்

தேசியமும், சமூகமும்
சேர்ந்த விடுதலையை
சார்ந்து நின்று
மரணத்தை வென்ற
மனிதன்
தோழர் நாபா

## இருட்டு

கண்ணுக்கு கண் என்று
பழிவாங்கும் படலம்
தொடர்வதால்
உலகம்
இருண்டு கொண்டு போகிறது

## வேதனை

நோயுற்றபோதான
வேதனையைவிட
என்மீது
யார் யார் அக்கறை
என்று தெரிந்த போதுதான்...

## சுயம்

புலியைப் பார்த்து
பூனை சூடு போட்டதுபோல்
மற்றவரைப் பார்த்து
வாழ நினைத்து
உனது சுயத்தை
இழக்காதே

## புதுப்புது அர்த்தங்கள்

இயற்கை எழுதிய கவிதை
உனது வாழ்க்கை
அதை வாழ்வதே
புதுப்புது அர்த்தங்கள்

## தியானமும் காமமும்

தியானத்தால்
மனம் உடல் வடிவாகும்
காமத்தால்
உடல் மன வடிவாகும்
மலரினும் மெல்லியது

## மாற்றம் வேண்டும்

சேற்று வயலில்
நாற்று நடுபவரை
வேற்றுலக மனிதராய்
பார்ப்பதில்
மாற்றம் வேண்டும்

## நவீன முதலாளித்துவம்

உழைப்புக்கேற்ற
ஊதியம் கொடுக்காது
உறிஞ்சும் அட்டையாக
நவீன முதலாளித்துவம்
என்னும்
உலகமயமாக்கல்

## நீ மனிதனாவது

கள்ளடித்தால்
கடவுளாகிறாய்
அல்லது
அரக்கனாகிறாய்
நீ மனிதனாவது
எப்போது

## பாடலில் கூடல்

பாடலில் என்றும் நாடல்
தேடலாக இருந்தால்
கூடலாகும்
கவிச்சுவை

## தேனீக்கள்

சுண்டு விரலுக்குள்
பூமியை
சுருக்கி விட்ட
கைத்தொலைபேசியின்
அதிர்வால்
தொலைந்து போயின
தேனீக்கள்.

## கண்ணுக்கு கண்ணாடி

தொலைக்காட்சி முன்னிருந்து
தொலைந்து போகும்
கண்ணுக்கு
கனவு காணவும்
கண்ணாடி வேண்டும்.

## தீக்குளிப்பு

மூன்று முறை
தீயைச் சுற்றியதால்
முப்பது வருடமாய்
அவனிடம்
தினம் தினம்
தீக்குளிக்கிறேன்

## விவாகரத்து

விவாகம் ரத்தாவது
விவாகத்தின்
பிழையல்ல
விவகாரமுள்ளவர்களின்
பிழை

## வெள்ளை

வேட்டியும் சேட்டுமாய்
வெள்ளையாய் திரிந்த
அப்பாவின் இழப்பில்
அம்மா.....

## காமம்

பத்தவைக்கும்
காமத்தை
பொத்தி வைத்துக்
கொண்டு
சுத்தமானவன்
என்கிறாய் நீ

## உயிரும் உடலும்

உயிர் என்பது
காதல்
உடல் என்பது
காமம்
உயிர் இல்லையேல்
உடல்..........

## திறப்பும் பூட்டும்

கதவு தட்டப்பட்டது
திறந்தாள் மனைவி
அங்கே
இதயத்தைப் பூட்டிய
காதலி

## ஒன்று இரண்டு

கண்கள் இரண்டு
பார்வை ஒன்று
கால்கள் இரண்டு
பயணம் ஒன்று
இதயங்கள் இரண்டு
காதல் ஒன்று

## தயாராகு

இளமை போகிறதே என்று
தலையைத் தடவாதே
முதுமையை வரவேற்க
தயாராகு

## யாகம்

மரங்களை
வெட்டிப் போட்டு
ஓமகுண்டத்தில்
யாகம்
மழை வருவதற்காய்

## தெரியாத செய்தி

நான் கடவுளுக்கா
பெண்ணின் கூந்தலுக்கா
பிணத்துக்கா
பூக்கும் எனக்குத் தெரியாது

## தமிழின் நிலை

எங்கும் தமிழ்
எதிலும் தமிழ்
என்றிருந்து
தமிழனாலேயே
எங்கு தமிழ்
எதில் தமிழ்
என்றாகிவிட்டது
மங்காத தமிழின்
நிலை

## மனிதன்

மனிதர்களை நேசித்து
மனங்களை வாசித்து
அன்பைப் பூசித்தால்
நீ மனிதன்

## தமிழ்ப்படுத்தல்

அனைத்தையும்
தமிழ்ப்படுத்துகிறோம்
என்று
தமிழைப் படுத்துவதே
தமிழர்களின்
பணியாகி விட்டது.

## இல்லை

அறிவில்லையேல் பணிவில்லை
பணிவில்லையேல் பண்பில்லை
பண்பில்லையேல் அன்பில்லை
அன்பில்லையேல் வாழ்வில்லை

## அரக்கர்

அரக்கப்பரக்க
ஓடும் வாழ்வில்
இரக்கதனம்
அற்றவர் யாவரும்
அரக்கர்களே

## நல்லது

பிள்ளையின்
நல்லதுக்காகவென்று
அம்மாவும் அப்பாவும்
ஓயாமல் வேலையில்
பிள்ளை
நடுத்தெருவில்

## காதல்

வரைந்தாலும் தெரியாது
வார்த்தையிலும் புரியாது
உணர்ந்து கொள்வதே
காதல்

## மனிதனாக வாழ்

பிறக்கும் முன்னால்
மனிதனா
இறந்த பின்னால்
மனிதனா தெரியாது
வாழும்போது
மனிதனாக வாழ்

**முத்து**

மூழ்கி எடுக்கும்
முத்து
கடலடியிலும்
கருவறையிலும்

**நாக்கு**

கொடுக்கால் கொட்டுவது
தேள்
கொடுக்கில்லாமல்
கொட்டுவது

**தண்ணீர்**

நேற்று ஐந்தடியில்
இன்று
ஐம்பதில்
நாளை கிடைக்காது

**தோலுரித்தல்**

பிழை செய்யாமலேயே
தோலுரிக்கப்படுகின்றன
வாழைப்பழங்கள்

**சுவை**

புளித்துப்போன
சோம்பலை விடு
உப்புள்ள வியர்வை
சிந்த உழை
இனிக்கும் என்றும்
வாழ்க்கை

## மழையும் விதையும்

அவன் மழையாகப்
பொழிந்தான்
நான் நிலமாக
வாங்கினேன்
விதை முளைத்து
விருட்சமாக

## பேசு

ஏழையைப் பற்றிப்
பேசுவதை விடுத்து
ஏழையிடம் பேசு
அப்போதுதான்
நீ மனிதன்

## நட்பு

உண்மையான நண்பர்களிடம்
பயமின்றிப் பழகலாம்
நேரடி எதிரியிடம்
அவதானமாயிருக்கலாம்
நண்பர்களான
எதிரிகளிடம்.

## ஆறுதல்

அஞ்சுதலை அவனிடம்
சொல்
ஆறுதலைத் தருவான்
ஏழுதலைமுறைக்கும்
தொடரும்

## குரல்

பாடுபட்டுப் பக்குவமாய்
கூடு கட்டத் தெரியாது
ஆனாலும்
ஈடுகட்ட முடியாத
குரல் எனக்கு

### இனிக்கும்

வலிகளின்
உயரத்தைத் தாண்டு
வடுக்களின்
உயிரைத் தொடு
வாழ்க்கை இனிக்கும்
வளமோடு

### பாடு

வேதனையும் விரக்தியுமாய்
அவன் பாடு
பெரும்பாடு பட்டுப்
போனமை
பாட்டுக்குள்
தெரிகிறது

### வட்டம்

உன்னைச் சுற்றி
வட்டம் போடாதே
வட்டத்துக்கு வெளியேதான்
வாழ்க்கை இருக்கிறது

### எல்லாம்

மழைத்துளி எல்லாமே
முத்தாவதில்லை
கரித்துண்டு எல்லாமே
வைரமாவதில்லை
மனிதர்கள் எல்லோருமே....

## பூ பூக்கும்

மழை தொடுவதால்
நிலமும்
வளி தொடுவதால்
மலரும்
கண்கள் தொடுவதால்
காதலும்

## அழகு

வார்த்தைக்கு அழகு
கவிதை
பார்வைக்கு அழகு
புதுமை
வாழ்க்கைக்கு அழகு
எளிமை

## முன்னோக்கம்

நதி பின்னோக்கிப்
போவதில்லை
வாழ்க்கையும் கூடத்தான்
என்றெண்ணி
முன்னோக்கி
ஒழுங்காக வாழ்

## கண்டுபிடிப்பு

இயந்திரக் கண்டுபிடிப்புக்குப்
பின்
ஐரோப்பியர்களின்
கண்டு பிடிப்பு
புகலிடத் தொழிலாளர்கள்

### கூட்டம்

தொழிலாளர்தின
ஊர்வலத்தில்
பெருங்கூட்டம்
அனைவரும்
முதலாளிகளின்
பிரதிநிதிகள்

### பிரசவம்

உயிர்களின் பிரசவம்
பெண்களின் கருப்பையில்
கவிதைகளின் பிரசவம்
கவிஞனின் மனப்பையில்

### கடைதல்

பாற்கடல் கடைதலில்
அமுது வந்தது
நூற்கடல் கடைதலிலும்
அமுது வரும்

### வீண்பொழுது

உன்னை நீ
தெரிந்து கொள்ளாது
என்னை நீ
குறை சொன்னால்
பின்னைப் பொழுது
வீண் பொழுதே

### காகம்

கரைந்து கரைந்து
உறவினரை
விரைந்து கூப்பிட்டு
பகிர்ந்துண்ணும்
பறவை நான்

## புதிய ஜனநாயகம்

பெரும்பான்மை
வாக்கெடுத்தவர்
எதிர்க்கட்சியாக
நிராகரிக்கப்பட்டவர்
கூட்டாட்சி செய்வதே
புதிய ஜனநாயகம்

## ஞானி

உண்டு என்பதும்
இல்லையென்பதுமான
உனது
நம்பிக்கையைப்
புரிந்து கொண்டால்
நீ கூட
ஞானிதான்

## கொலை

எமக்குள்
சாதி சமய
அரசியல் இல்லை
அதனால்
நம்மை நாமே
கொல்வதில்லையென
மிருகங்கள்
தமக்குள் பேசின

## சுவாசம்

மற்றவர் துன்பத்தில்
உனக்கு மகிழ்வா
உனது சுவாசத்தில்
கரியமில வாயுவை
நிரப்புகிறாய்

## தேடல்

பொன்னையும் பொருளையும்
தேடலை விடுத்து
உன்னை நீ தேடு
உயர்வடைவாய்

## உணர்வு

இரத்த உறவின்
இழப்பில்
ஊனுள் உருகும்
உயிரின் துடிப்பை
உணர்வாய்

## ஆச்சரியம்

இயந்திரமாய்
வாழ்ந்து விட்டு
விடுமுறை சென்ற
என் மகனுக்கு
பறவைகள் மிருகங்களோடு
நம்மவரின்
இணைந்த வாழ்வைக்
கண்டு
ஆச்சரியம்

## பொச்சம்

வாய்க்கால் தண்ணீரை
ருசித்த வாய்
இப்போ
போத்தல் தண்ணீரில்
பொச்சம் அடங்கவில்லை

## மலடு

மகப்பேறு இல்லையென்று
மனைவியை மலடியாக்கும்
சுந்தர புருசர்கள்
விஞ்ஞான உலகத்தில்...

## மீசைக்குழந்தை

அடுத்தைந்து குழந்தைகள்
ஆகிவிட்டாலும்
மீசைக் குழந்தைமேல்
தீராத காதல்
அவளுக்கு

## உன்னிலிருந்து

யானையிலிருந்து
தந்தம்
பூனையிலிருந்து
புனுகு
உன்னிலிருந்து..

## பின்னவர்

என்னவளும்(ரும்) பிள்ளைகளும்
என்றாகி விட்டால்
பின்னர்
பெற்றவரும் பின்னவரே

## பாலைவனம்

பாடித்திரிந்த பனந்தோப்பும்
அதைத்
தேடித்திரியும் என்மனமும்
பாலைவனமாகியதேன்

## நலம்

சுயநலம் என்பது
உன்வழி
பொதுநலம் என்பது
ஊர்வழி
எது நலம் என்று
நீ விழி

## பொங்கல்

ஞாயிறுக்கு
நன்றி சொல்லுகிறோம்
திங்களையும் தாண்டி
செவ்வாய் கற்பாறைக்கு
நாசா வைத்த பெயர்

## பயம்

ஊர்முழுதும்
மரம் தறிப்பதாலே
நீர் இன்றி
வெடித்திருக்கும்
நிலங்கள்
பார் முழுதும்
பரந்திருந்திருந்து
பயம் காட்டுது

## அச்சம்

தேசமெங்கும்
தெளிவின்றி
மாசுபடுத்தலை
சூழலில்
மகிழ்வுடன் செய்வதால்
ஓசோனின் ஓட்டை
ஓசையின்றி
அச்சுறுத்தல்

### சுயம் இழப்பு

அயல்மொழி மோகத்தில்
அமுதத் தமிழை
அருவருப்போர்
சுயமிழந்து
முகமிழக்கும்போது
அகமழுவர்

### கரணம்

பன்னீர் குடத்தில்
ஜனனம்
தண்ணீர் குடத்தில்
மரணம்
இடையில்
கண்ணீர்க் குடத்தில்
கரணம்

### அம்மா

பெரு நதியான
ஓவியம்
ஒரு சொல்லில்
ஒரு காவியம்
அது அம்மா

### மடாலயங்கள்

அப்பாவிகளுக்குப்
பயங்காட்டிப்
பணம் கறக்கும்
வணிக நிறுவனங்களாய்
புகலிட மடாலயங்கள்

## வழிகாட்டி

துப்பாக்கி என்னும்
குருடனுக்கு
வெள்ளைப் பிரம்பின்
கறுப்பு வழிகாட்டியாய் நீ
அதனால்
பச்சைப் பூமியெங்கும்
சிவப்புக் கம்பளம்

## உச்சியைக் காண்

உள்ளத்தில் சிறகு கட்டு
உலகம் முழுவதும் பற
ஆச்சரிய உயர்வின்
உச்சியைக் காண்

## பிரசவம்

பிரவசவ வலியின்
உச்சத்தில்
மனத்திரையில்..
அம்மா
இப்படித்தானே
என்னையும் பெற்றாள்

## வியாபாரம்

வாழ்வை வியாபாரமாக்கினால்
லாபநட்டம் கிடைக்கும்
ஆன்மாவுக்கு கிடைக்குமா
ஆனந்தம்

## உபயம்

அபயம் கொடுக்கும்
ஆலயத்தில்
உபயம் கொடுத்தவர்
பெயருண்டு
சிற்பம் செதுக்கிய
சிற்பியின் பெயர்...

## வேடந்தாங்கல்

இந்தப் பூமி
உனது வேடந்தாங்கல்
இங்கு மீண்டும்
வருவாயா
உனக்கே தெரியாத
மர்மம்

## நன்றி

தத்தெடுத்த எல்லோருக்கும்
நன்றி சொல்கிறாய்
பெற்றெடுத்த
உனது தாய்க்கு
என்ன சொல்லுவாய்?

## தேடல்

கொதிக்கும் மணலில்
நடக்கையில்
மிதிக்கும் பாதம்
நிழல் தேடும்
என் வாழ்வின்
கொதிப்பில்
அவள் நிழல்
தேடுகிறேன்.

## உன்னைக் காண்

புதிய மலர்கள் போல்
தினம் தினம்
புதிதாய் பிற
காணாமல் போ
உன்னைக் கண்டெடு

## சுமப்பு

வயிற்றில் சுமந்ததால்
அவள்
இறப்புவரை என்னை
மனதில் சுமக்கிறாள்

## வீரம்

நேர்மையான வீரத்தைத்
தொலைத்து விட்டு
விதம் விதமாய்
மீசை வைத்துக் கொள்ளும்
விவேகம் நிறைந்தவர்கள்
நாம்

## பகிடி

ஒழுக்கத்தையும் அன்பையும்
தூர எறிந்து விட்டு
அபிசேகமும், ஆராதனையும்
செய்து
பக்தன் என்று
பகிடி விடுகிறாய்

## மேய்ப்பர்

மேய்ப்பவரே
மேய்பவரானதால்
மனிதர்களின்
கூடாரத்தில்
தினம் தினம்
மரண ஓலம்

## சமூகம்

நீ சேர்ந்த நீங்கள்தான்
சமூகம்
உனது (உங்களது)
தூய்மைதான்
சமூகச் சுத்திகரிப்பு

## பிரபஞ்சம்

நீ பிரபஞ்சத்தின்
ஒரு பகுதி
பிரபஞ்சம்
உன்னில் ஒரு பகுதி
பிரபஞ்ச உயர்வு
உன் கையில்

## வயோதிபர் மடம்

குஞ்சுகளைப் பிரிந்த
விரக்தியுடன்
நெட்டுயிர்த்து விழியேங்கும்
பெற்றோரின்
திறந்த வெளிச்
சிறைச்சாலை
வயோதிபர் மடம்

## இடம்

நானும் அவளுமாகி
இருந்து - பின்
நாங்களாகி மகிழ்ந்ததால்
நீங்கள் பிறந்தது
நீங்கா நினைவுகளே

**பணியாரம்**

வெல்லக் கலவையிலே
செய்த
கல்லுப் பணியாரத்தில்
எல்லுப்போல தின்றாலும்
சுவையே சுவை

**கற்பகதரு**

பாணிப்பனாட்டும்
பனங்காய்ப் பணியாரமும்
ஒடியல் கூழும்
அவிச்ச பனங்கிழங்கும்
புழுக்கொடியலும்
பூரானும் நுங்கும்
கனவில் வந்தாலும்
வாயூறும்

**சுழற்சி**

மானுடம் காட்டுவது இலக்கியங்கள்
இலக்கியம் படைப்பது மனிதர்கள்
மனிதரின் அடையாளம் மனது
மனதின் வழிகாட்டல் அறிவு
அறிவு வளர்ச்சிக்கு கல்வி
கல்வியின் பெறுமதி வாழ்க்கை
வாழ்க்கையின் நோக்கம் தேடல்
தேடலின் முடிவு மானுடம்

**ஓட்டம்**

கருவைத் தேடி ஓடும்
ஊயிரணுக்கள் போல
ஓடும் ரயில் கண்ணாடியில்
மழையணுக்கள்

## நொடிப்பொழுது

பிறப்பும் இறப்பும்
மட்டுமல்ல
சுகங்களும், துக்கங்களும்
கூட
நொடிப் பொழுதில்தான்
நடந்தேறுகின்றன.

## இசை

ஜனனம் தொடங்கி
மரணம் வரையில்
இசையோடு இசைந்து
வாழ்பவன் தமிழன்

## கொடுமை

தாய்மடியில் தலைவைத்துத்
தூங்கமுடியாத
ஏக்கத்துடன்
விரக்தியாய் சிரித்தபடி
இந்த வாழ்க்கை
கொடுமை

## திருப்தி

வயிற்றுப் பிழைப்புக்காய்
எல்லாம் செய்யும் நீ
ஆத்மதிருப்திக்காய்
செய்வது என்ன?

## நம்பிக்கை

விதியை விட்டு விட்டு
நம்பிக்கையில்
நம்பிக் கைவை
வாழ்க்கை இனிக்கும்.

**நண்பன்**

வளமையிலும், வறுமையிலும்
துணை நிற்பவன்
இளமையிலும், முதுமையிலும்
இனிய நண்பன்

**மனம்**

நல்லவரின்
அறிவுரையைக் கேட்க
உன்னை விடவில்லையா
அழிவுக்கு கூட்டிச் செல்கிறது
மனம்

**பண்பு**

பகைவனிடம் கூட
நல்ல பண்புகள்
இருந்தால்
அன்னம்போல்
உனதாக்கு

**கைதி**

அடுத்தவர் தீங்குகளை
மன்னிக்காதவரை
நீ
கடந்த காலத்தின்
கைதியே

**பூட்டு**

பொன்னைப் பூட்டி வை
உன்னைப் பூட்டி வை
பெண்ணைப்
பூட்டி வைக்காதே

## தீர்வு

வாழ்வதற்கு வழியில்லை
தற்கொலைதான்
தீர்வு என்றால்
உலகம்
கல்லறையாகும்

## முதியோர் இல்லம்

பிஞ்சுகள்தானே
இவர்களென்றெண்ணிய
குஞ்சுகளால்
கொத்தி விரட்டப்பட்ட
கோழிகளின் கூடாரம்

## தேடல்

உயிரின் வேர்கள்வரை
உன்னைத் தொலைக்காமல்
பசியுடன் தொடர்ந்து
தேடு

## வாழ்வு

எப்போ தொடங்கும்
எப்போ முடியும்
என்பது
உன் கையில் இல்லை
ஆனால்
எப்படி வாழ்வதென்பது.....

**புதிதாய் பிற**

துன்பங்களை
பாம்பாய் தோலுரி
தினமும்
புதிதாய் பிற
மலர்ந்து மணம்வீசும்
வாழ்க்கை

**அடையாளம்**

உனது வாழ்க்கையின்
அடையாளம்
சிந்தனையும்
செயலும்தான்

**பார்வை**

அமைதியும், சந்தோசமும்
உன்கையில்தான்
அதனைப்
பார்க்கும் பார்வையைத்
தேடிப்பெறு

**கனவு**

துள்ளித்திரிந்த கிராமம்
கல்வி
அள்ளிக் கொடுத்த பள்ளி
எல்லாமே
தெள்ளத் தெளிவாய்
கனவில் மட்டும்

## தொலைதல்

கள்ளமும் கபடமும்
உள்ளத்தில்
குடிபுகுந்தால்
அமைதி
மெல்லத்
தொலைந்து போகும்

## பதிவு

சிந்தனை அறைகளைத் திற
இறந்தகாலப்
பதிவுகளைப் புரட்டு
நீ மனிதனா என்பது
அங்கே தெரியும்

## உயிர்மெய்

உயிரைத் தாங்கி
மெய்யை வளர்த்து
உயிர்மெய்யாக்கியதால்
அவள் அம்மா

## அறிவு

சுரக்கும் தாய்ப்பாலில்
வளர்
வழியும் தந்தையின்
வியர்வையில் படி
ஊறும் அறிவு
உனக்குள்ளே

## பொதுவுடமை

நாற்பூதங்கள்
பொதுவுடமையாய்
நம்மைக்காக்க
பூமியைப்
பங்கு போட்ட நாம்
தனியுடமையாளர்களாக

## மனிதன்

அன்புக்கு அடங்கிப்
பனிமலராய்
குளிர்ந்து போ
அநியாயத்துக்கு
எரிமலையாய்
பொங்கு

## தாடி

பின்தாடி வளர்த்தவளில்
காதலாகிக்
கசிந்துருகி
முன்தாடி வளர்த்த
தேவதாஸ் நான்

## நயாகரா

அமெரிக்கக் கங்கை
ஓடிவந்து
கனடாப் பூமிக்குச்
செய்யும்
பாலாபிசேகம்

## அகந்தை

தொடக்கம் முதல்
வாழ்வின் அடக்கம்வரை
அடக்கமாயிரு
மடக்கமாகும்
உன் அகந்தை

## போடு

பசிக்குப் போடு
சோறு
பகைக்குப் போடு
கூறு
பார் முழுதும்
என்றும் உன்னோடு

## அதிஷ்டசாலி

பாலைவனத்தில்
ஒரு சொட்டு நீரில்
அரைச்சொட்டு
உனக்குத் தருபவர்
உன் துணை என்றால்
நீ அதிஷ்டசாலி

## வலம்புரிஜான்

அன்னைத் தமிழுடன்
இரண்டறக் கலந்து
அன்னையர் தினத்தில்
ஆழ்ந்து உறங்கிய
வார்த்தைச் சித்தர்

## தன்னம்பிக்கை

என்னால் முடியும்
தன்னம்பிக்கை
என்னால் மட்டுமே முடியும்
தலைக்கனம்
தன்னம்பிக்கை கொள்
தலைக்கனம் களை

## பெண்

ஆக்கும் திறனும் உண்டு
நாட்டைக்
காக்கும் திறனும் உண்டு
ஆண்கள்
தாக்கும் திறனை
எதிர்த்து முன்னேறு

## சாதனை

வேதனைகளைத் தாங்கு
சோதனைகளைத் தாண்டு
சாதனைகள் உன் கையில்

## பிரதி

உங்கள் பிரதிதான்
பிள்ளை
உங்கள்
பழக்கங்களுக்கும் கூட
உங்களை
நல்வழிப்படுத்துங்கள்
உங்கள் பிள்ளை.

## காத்திருப்பு

எனக்குள் வந்த காதல்
அவளுக்கு வராததால்
இன்னும்
காத்திருக்கிறேன்
நரையுடன்

## மதம்

மனிதனை மனிதனாய்
மதித்து
மகத்தான
சாதனைகள் புரியும்
மனிதமே
சிறந்த மதம்

## புகலிட வாழ்வு

உதயமில்லா இரவுகளோடு
இதயமெல்லாம்
பாலைவனங்களாய்
புகலிட வாழ்வு
புரியாத புதிர்

## மெய்

தேகம் பொய்
அதில்
நோக்கமும் பொய்
தேடலின்
தாகம் மட்டுமே
மெய்

## நட்பு

இன்பத்தில் பங்கெடுக்கும்
துன்பத்தில் தோள் கொடுக்கும்
என்பு தோல் வாழ்வில்
எதிர்பார்ப்பு இல்லாதது

## காதல்

உறவுகளின்
உற்பத்திச் சாலை
உணர்வுகளின்
போர்க்களம்
உயிரினைச்
சுவைக்கும் சுகம்

## சுனாமி

ஆழ்கடலில்
தகடுகள் முட்டி
வேளப்பலத்தில்
பூமியைத் துளைத்து
நீரை விழுங்கி
வெளியே துப்பும்
ஊழித் தாண்டவம்

## நடிப்பு

தம்செயல் முடியும்வரை
பொய்முகம்
காரியம் கைகூடினால்
நிஜமுகம்
பன்முக வல்லவர்கள்
பாதி மனிதர்கள்

### நடை

மிருகங்கள் பிறந்தவுடன்
நடக்கின்றன
பறவைகளும் கூடத்தான்
மனிதன் மட்டும்..

### உயிர்க்குருவி

தானாகவே
கூட்டுக்குள் வந்து
தானாகவே
பறந்து விடுகிறது

### உயர்வு

எனக்கு அவன்
அவனுக்கு நான் என
ஒன்றென்றானபோது
அவனைவிட உயர்ந்தது
உலகில் ஒன்றுமில்லை

### தலைப்பிரசவம்

ஜனனமும் மரணமும்
சந்தித்து
ஜனனமோ மரணமோ
வெல்லுமிடம்

### காதல் சுகம்

ஒன்றும் ஒன்றும்
ஒன்றென்று
அவளுக்குள் அவனும்
அவனுக்குள் அவளும்
தொலைந்து போகும்
காதல் சுகமானது

## கனவு தேசம்

உயிருள் உயிர்
கலந்து
ஆன்மாக்கள்
கரைந்து போகும்
கனவு தேசம்
காதல்

## மனைவி

செத்தவீடும் முடிஞ்சு
காடாத்தும் ஆச்சு
சாப்பிட்டாயா என
அவனைக் கேட்பாரில்லை
முதன்முதலில்
மனைவியின் இழப்பை
உணர்ந்தான்

## பொருத்தம்

பத்துப் பொருத்தம் இருந்தும்
மனம் பொருந்தா விட்டால்
அந்தச் சந்தோசங்களுக்கான
ஆயுள்தண்டனை ஆகிவிடும்
வாழ்க்கை

## புள்ளி

வெள்ளைத் தாளான
என்மனதில்
புள்ளியாய் விழுந்த
காதல் வளர்ந்து
வெள்ளை
புள்ளியாகி விட்டது.

## திருமணம்

ஒரு சடங்கு
இருமனங்களின்
சங்கமம்
மூன்றாவது உயிரின்
வருகைக்கு அங்கீகாரம்

## வாழ்க்கை

பன்னீர் குடத்தில்
பிறந்து
கண்ணீர் உடலில்
வாழ்ந்து
தண்ணீர்க் கரையில்
முடிவதே வாழ்க்கை

## கூடு

பறவைக் கூட்டை
பார்த்து இரசி
அறிவுக் கூட்டை
திறந்து படி
பிறவிக் கூட்டை
கண்டு அறி

## தோழன்

மற்றவர் துன்பத்தில்
ஆக்ரோசம்
வருகிறதா
நீயும்
என் தோழனே

## விடியல்

திருடன் தலைவனாகி
விடியுமென்றான்
தலைவன் திருடனாகி
விடியுமென்றான்
மனிதன் தலைவனாகும்போதே
விடியும்

## விடுதலை

இழப்பதற்கு எதுவுமற்றவர்கள்
விடுதலையை நேசித்தபோது
பிரபுத்துவ எச்சங்களால்
அழிந்து போயினர்

## சாதனை

கடலளவு திறனுண்டு
உடல் முழுதும்
பலமுண்டு
திடமான மனமுண்டு
கடுகளவாவது
சாதித்தாயா?

## தாம்பத்தியம்

அவனுக்குள்
அவள் கரைந்து
அவளுக்காக
அவன் கரைந்து
அவர்களே
கரைந்து போவது

## அனுபவம்

அனுபவம் இல்லாத
மனிதன் இல்லை
அனுபவம் இல்லாதவன்
மனிதன் இல்லை
அனுபவமே மனிதனை
உருவாக்குகிறது

## சிறியது

சிறகிருந்தால்
வானம் சிறியது
துணையிருந்தால்
உலகம் சிறியது
மனமிருந்தால்
நேரம் சிறியது

## வாசம்

நேசம் நிறைந்த
என்னவள்
வாசம் நிறைந்த
பூவை - அவள்
வாசம் செயவது
என்னிதயம்

## குழந்தை

கட்டழகியை மணந்து
கடிட்டிலில் எழுதிய
காதல் கவிதையால்
தொட்டிலில் கிடைத்த
காதல் பரிசு

## மனிதன்

அமிர்தமும், அமிலமும்
கொண்டவன் நீ
அமிலம் வழங்கினால்
விலங்கு
அமிர்தம் வழங்கினால்

## வாழ்வு

அகமும் புறமும்
ஆழ்ந்து பார்த்தால்
நகமும் சதையும் போல
சுகமும், ரணமும்
நிறைந்தது

## அதிசயம்

மகிழ்ச்சியைப் பகிர்
இருமடங்காகும்
கவலையைப் பகிர்
பாதியாகும்
அதுவே வாழ்க்கை
கணக்கின் அதிசயம்

## மானுடர்கள்

மனிதருக்கு உதவாத
மானுடர்கள்
மழையில்
மலருக்கு
குடை பிடிக்கிறார்கள்

**உத்தமர்கள்**

கருத்துச் சுதந்திரத்தை
கல்லெறிந்து
கொன்று விட்டு
உரிமைப்போர் நடத்தும்
உத்தமர்கள்
உலகெங்கும்.

**பனிநிலத்துப் பனைகள்**

மனப்பிணியால்
அவஸ்த்தைப்பட்டு
மணித்துளிகளை
யுகங்களாக்கும்
பனிநிலத்துப்
பனைகள் நாங்கள்

**எழுத்து**

பொருள் வேண்டி
எழுதாது - கவிப்
பொருள்தனைக்
கருத்தில் கொண்டு
இருள் அகல எழுது

**சருகு**

இலையும் பூவும்
மட்டுமல்ல
மனிதனுங்கூட
உதிர்ந்து போனால்..

**பார்வை**

வெறுப்பாய் பார்த்தால்
தப்பு
விருப்பாய் பார்த்தால்
சரி
எல்லாமே
பார்வையில்தான்

## துர்முகங்கள்

நீரடி நிறை பூமியில்
ஆறடி மனிதன்
இதயத்துள்
நூறடியாய் விரியும்
துர்முகங்கள்

## நல்லவை செய்

தீயவை நிறைந்த நெஞ்சு
தீக்குள் தீய்ந்து
போகுமுன்
நல்லவை செய்

## வழி

துப்பாக்கிகள்
நிறைந்த
துர்ப்பாக்கிய
தேசத்தில்
அமைதி
துய்ப்பார்க்கு
வழி இல்லை

## போராடு

ஒவ்வொரு விநாடியும்
போராடு
வக்கிரங்களிலிருந்து
விடுதலை பெற

## அன்பு

மொழியில்லாத கவிதை
விழியில்லாத பார்வை
அழிவில்லாத அது

## காதல் நேரம்

அவள் வந்தால்
யுகம் கணம்
வராவிட்டால்
கணம் யுகம்

## சாதனை

அழுதபடி பிறக்க
உலகம் சிரிக்கிறது
சாதித்துவிட்டு
சிரித்தபடி இறந்துவிடு
உலகம் அழும்

## அழகு

பகலில் அவள்
பேரழகு
இரவில் அவள்
போரழகு
அழகி என்னவள்
பெயர் அழகு

## அர்த்தநாரி

சுனாமி
அவள் அன்னையை
விழுங்கியதால்
தாயுமாகித்
தந்தையுமான
அர்த்தநாரி
அவள் அப்பா

### சுரண்டல்

சுனாமியின் சூதாட்டத்தால்
இருண்ட வாழ்வும்
இறுகிய மனதுமாய்
வரண்டுபோன மக்களிடம்
சுரண்டல் செய்யும்
சுந்தர புருசர்கள்

### மதமாற்றம்

விதமான ஆசையில்
அகப்பட்டு
மிதமான கவலைகளில்
ஆள்ப்பட்டு
மதமாற்றம்
என்றலையும் மூடர்கள்

### ஆட்டிறைச்சி

பிறந்தநாள்
கொண்டாட்டத்தின்
பிரத்தியேக
கௌரவமே
ஆட்டிறைச்சி
சமைப்பதுதான்

### பொதுவுடமை

உன்னைத்
தேடிக்கண்டு
உன்னில்
பிறரைக்
காண்பது

### அறி

பொன்னைச்
சுட்டு அறி
மண்ணை
நட்டு அறி
நட்பை
பட்டு அறி

### பொய்மை

மரங்களைத்
தறிக்காதீர் என்ற
மரப்பலகை
அறிவித்தலில்
மனிதனின் பொய்மை

### ஆழிப்பேரலை

ஐம்பூதங்கள் மீதான
அறிவியல் விதைப்பின்
விளைச்சல்

### ஹோர்மோன்கள்

காதலாகிக் கசிந்துருகி
உள்ளமும் உடலும்
நனைவதெல்லாம்
ஹோர்மோன்களின்
உயிர்த்துடிப்பே

### பெற்றோர்கள்

பெற்றெடுத்துப்
பெயர் கொடுத்து
கற்பதற்கு
கைகொடுத்து
நற்றமிழன்
ஆக்கிவிட்டவர்கள்

## சினிமா

கனவுகளை மட்டுமன்றி
கனவு காண்பவர்களையும்
உருவாக்கும்
கனவுத் தொழிற்சாலை

## நாவடக்கம்

நாற்பதானால்
நாவடக்கம் கொள்
இரத்தமும் கொதிக்காது
சர்க்கரையும்
இனிக்காது

## சுமைதாங்கி

மனவறையில்
என்னைத் தாங்கி
மணவறையில்
மாலை தாங்கியதால்
கல்லறைவரை
சுமைதாங்கி

## சுமை

தாய் என்னைச்
சுமந்ததும்
பூமி என்னைச்
சுமப்பதும்
சுகமான சுமைகள்

## அவள்

பூக்கம்பமாய்
வந்தவள்
பூகம்பமானாள்
நான்
பூமிக்குள்
அமிழ்ந்து போனேன்

**தாம்பத்தியம்**

இருளில்
உள்ளவரைதான்
வாழ்க்கையில்
வெளிச்சம்

**ஞானம்**

காற்றென்பது உயிரில்லை
காற்றில்லாமல் உயிரில்லை
என்று
கற்றும் பட்டும்
அறிந்து கொள்வது

**சூனியம்**

கற்றறிந்து கொள்வது
அறிவு
பட்டறிந்து கொள்வது
ஞானம்
விட்டெறிந்தால் தெரிவது
சூனியம்

**பூமி**

பூமியை உன் பெயரில்
எழுதத் துடிக்காதே
பூமி உன்பெயரை
எழுதி வைத்திருக்கா
பார்க்கத் துடி

**கண்ணிவெடி**

போரின்போது
புதைப்பது
அமைதியின்போது
தோண்டுவது

## ஆராரோ

தாய் படிக்கும்
தாலாட்டை
ஆராரோ பாடினால்
எல்லாம்
ஆராரோ ஆகாது

## குழந்தை

அழுகிறதா
சிரிக்கிறதா
அடம்பிடிக்கிறதா
என்று
புரியாத புதிர்

## வழி

ஒரு வழியாக வந்து
பல வழியாக
வாழ்ந்த நீ
போவதற்கு
ஒன்பது வழி

## பெண்மொழி

ஆண்மொழியில்
பெண்ணியத்தை
அழகுறப்
பேசுவதை விடுத்து
பெண்மொழியைக்
கற்றுக் கொள்

## குண்டு
அமெரிக்க விமானங்கள்
நாடு நாடாய்
குண்டு போட்டன
அமெரிக்காவில்
விமானமே குண்டானது

## என்பேனா
அவள் தலையில் என்பேனா
என்றெழுதியது என்பேனா
இதனைப்
புதுக்கவிதை என்பேனா

## மெழுகுதரி
பிறந்தநாளில்
அணைக்கும் என்னை
இறந்த நாளில்
எரிய விடுகிறார்கள்

## கத்தி
கத்தி கொண்டு
கதிரறுக்கப் போனால்
கதிரோடு வரலாம்
உயிரெடுக்கப் போனால்.

## தேடல்
உறவுகள் சூழ்ந்திருக்கு
நட்புகள் நிறைந்திருக்கு
ஆனாலும்
மனிதனை இன்னும்
தேடுகிறேன்

### சிலுவை

பரபாசை விடுவித்த
அறிவிலிகள்
இன்றுவரை
மனிதர்களை
சிலுவையில்
அறைந்தபடியே

### நண்பன்

விழுந்து விடும்போதெல்லாம்
அறிவை நண்பனாக்கு
எழுந்து நடந்து
வெல்வாய்

### தாய்மை

உயிருக்குள்
உயிரிருக்கும்
உணர்வின்
உன்னதம்

### தலைமயிர்

இருக்கும்போது
அலட்டிக் கொள்வதில்லை
இல்லாதபோது
கவலை கொள்வதில்லை

### எறும்பு

மௌனமொழியால்
உழைப்பின் உறுதியை
உரத்துச் சொல்லும்
உலகின் சிறந்த குரு

**கழிதல்**

தாரத்துக்கு ஆதாரம்
பொருளாதாரம்
என்றாகியதால்
கன்னிகள் எல்லாம்
கழியாமலே

**புதிது**

உனக்குத்தான் காதல் புதிது
ஆதாம் ஏவாள் முதல்
காதலுக்கு நீ புதிதல்ல

**ஓட்டம்**

நீ
அறிவைத் தேடி ஓடு
வரலாறு
உன்னைத் தேடி
ஓடிவரும்

**தூண்டில்**

நான் மீன்களுக்கு
தூண்டில் போடுவதுண்டு
அவள் முகத்தில்
மீன்களே
தூண்டில் போடுகின்றன.

**பாவாடை**

பாவாடை கட்டிய
அந்தப் பைங்கிளி
பாவாடை
படிக்கிறாள்

## போலிகள்

ஒற்றுமை மாநாட்டில்
குத்து வெட்டு
சமாதானக் கூட்டத்தில்
புறா விருந்து
வெளியே வெள்ளைக்கொடி
உள்ளே ஆயுதங்கள்

## கம்யூனிசம்

பிரபுத்துவ எச்சங்களின்
கலங்களில்
கம்யூனிச எண்ணத் தூவல்கள்
எழுத்துக்களிலாய்
ஈழத்து முற்போக்காளர்கள்

## நாண(ந)யம்

நாநயம் இல்லாது
மேடையேறுவதுபோல்
நாணயம் இல்லாமல்
வாழ்வில்
நாணயம் சேர்க்கும்
குறி

## நட்பு

பாலைவனத்தில்
நடக்கையிலே
பாதம் தேடும்
நிழல்போல
நட்பு வேண்டும்.

## தாய்மை

சிறகு முளைத்ததும்
பறந்து விடும் குஞ்சுக்கு
வாஞ்சையுடன்
இரைதேடும்
தாய்ப்பறவை

## கடல்கோள்

இயற்கையை சீண்டியதால்
செயற்கைத்தன மனிதர்களை
வியக்க வைத்தது கடல்கோள்

## தமிழ்

உயிர்வந்து
மெய்யில் கலந்து
உயிர்மெய்யாவதே
தமிழும் பிறப்பும்

## பால்

பிறப்பில்
தாய்மையின்
பால்சுரப்பு
இறப்பில்
பால்வார்க்கையில்
தாய்மையின்
கண்ணீர் சுரப்பு

## ஊன்றுகோல்

நாம் நிமிரும்வரை
பெற்றோர் எமக்கு
ஊன்றுகோல்
அவர் குனியும்போது
நாம் அவருக்கு...

## அளவுகோல்

உன்னை
அளவுகோலாக்கி
மற்றவரை அளக்காதே
உன்னை அளந்து கொள்ள
மற்றவரை அளவுகோலாக்கு

## கௌரவம்

எங்கிருக்கிறது
என்று தேடாதே
உனது நாக்குத்தான்
அதன் இருப்பிடம்

## தூய்மை

அடுத்தவர் தூய்மையை
சுரண்டிப்பார்க்கும்
உனது
சுவாசக்காற்றே
தூய்மை இல்லை

## சாதனை

ஏதுமறியா
பிஞ்சுகள் மனதில்
பேதங்களை வளர்த்து
சாதிக்கப் போவது
என்ன?

## நிர்வாணம்

மனிதர்கள் உடையுடன்
வெளிச்சத்தில்
மனிதம் மட்டும்
இருட்டில்
நிர்வாணமாய்

### விலங்கு

விலங்குகள் விலங்கிட்ட
விடுதலையைப் போராடி
விடுதலை செய்பவர் யார்?

### ஊருக்கு உபதேசம்

தாய்த்தமிழ்க் கல்வியை
காசாக்கும்
வாய்ச்சொல் வீரர்கள்
மேடைகளில்
ஊருக்கு உபதேசம்

### நல்லவர்

வல்லவராய் தீயவர்
முழக்கமிட
நாடெங்கும் நடைபிணங்கள்
நல்லவர்
மௌனிகளாய்□

### மை

அறியாமையில்
தற்பெருமையை
தொட்டு எழுதினால்
பொய்மையின்
வறுமையே பிறக்கும்

### வல்லரசு

உதவிக்கென்று வருவது
கள்ளத்தனமான
சுரண்டலுக்கும்
வில்லங்கமான
ஆதிக்கத்துக்குமே

## யூரோ

ரூபாயில்
கசக்கிய கந்தை
நிலைமாறும் உலகில்
யூரோவில்
பட்டுப் பீதாம்பரமாய்

## வெளிச்சம்

கருவறையும்
கல்லறையும்
இருட்டுத்தான்
இடையில்
உன் வாழ்வை
வெளிச்சமாக்கு

## தேடல்

அன்பைத் தேடினேன்
தாய்மை
அவளைத் தேடினேன்
காதல்
என்னைத் தேடினேன்
ஞானம்

## விதை

மற்றவர் துன்பத்தில்
உன் இதயம்
அழுகிறதா
உன்னுள்
மனிதத்தின் விதை
முளைவிடுகிறது

## பயன்

பூவுக்குள் பூகம்பமான
காதல் வலியை
உணரவில்லையாயின்
பூவுலகில் வாழ்ந்து
பயனென்ன?

## பனை

பழந்தமிழ்
இலக்கியங்கள் வாழ
களமமைத்து
ஓலைச்சுவடி கொடுத்த
கற்பகதரு

## கொழுப்பு

நாக்கு
கொழுப்பு ருசியை
கொண்டு வா
என்பதைக் கேட்பதுபோல்
இதயம்
வேண்டாம் என்பதையும்
கேள்

## ஆசிரியரின் ஏனைய நூல்கள்

1. காலடிச்சுவடுகள்
2. ஜேர்மன் தமிழர் வரலாறு
3. நலமாய் வாழ
4. ஆன்மாவின் வாசனை
5. தாலி

MANN (ERDE) MAGAZIN
V. Sivarajah
Am Windhövel 18a
47249 Duisburg
Germany



# தாய்நிலமும் ஆசிரியரும்

இதயம் என்னும் கருப்பையில் தாய்நிலத்தைச் சுமந்து தாயுமான திரு.கே.கே.அருந்தவராஜா (மேழிக்குமரன்) அவர்களின் கவித்துளிகள் ஒவ்வொன்றும் அவர் உதிரத்தில் பிறந்த ஆரோக்கியமான நவீனகாலக் குட்டிக் குழந்தைகள். பொருள் வேண்டி எழுதாது கவிப் பொருள்தனை கருத்தில் கொண்டு மனஇருள் அகல அருள் வேண்டி எழுதும் தாய்நிலக் கவிப்பெருமகனின் கவிதைத்துளிகள் பட்டென இதயத்தில் பதிந்துவிடும் கவிதை வடிவம். அனுபவம் இல்லாத மனிதனும் இல்லை. அனுபவம் இல்லாதவன் மனிதனும் இல்லை. வாழ்க்கை என்னும் பயணத்தில் சமூகத்தின் ஒவ்வொரு அசைவுகளையும் அனுபவ வாயிலாக சில வரிகளுக்குள் படம் போட்டுக் காட்டியுள்ளார் இந்தக் கவிஞர். வாழ்க்கைச் சுமையினை வழிகாட்டல் இன்றி தூக்கிச்சுமக்கும் துயர் நிறைந்த உள்ளங்களுக்கு சாய்ந்து தலைவைக்க தலையணை தரும் தாய்மடியாக தாய்நிலம் திகழ்கிறது. சுய நலம் என்பது உன்வழி பொதுநலம் என்பது ஊர்வழி எதுநலம் என நீ விழி எனச் சமுகத்தின் ஒருமைப்பாட்டை உரக்கச் சொல்லுமிடம் கரகோசித்து ஆர்க்கசித்துக் கொள்ள வேண்டிய பாடம். படைப்பாளிகளுக்கு முகவரி சூடிப் படைப்புகளுக்கு முத்திரைகுத்தி அடையாளப்படுத்தும் மலினப்படுத்தப் பட்ட பார்வைகளுக்கு அப்பால் அந்த வட்டத்தின் அலகை உடைத்துக் கொண்டு காலம் தரும் வழிகாட்டுதல்களுக்கு மக்களைக் கவனம் கொள்ளச் செய்பவனே சிறந்த சிருஷ்டி கர்த்தா என்ற புதிய ஆருடத்தைத் தாய்நிலம் தன்னார்வமாகப் பதிவு செய்கிறது. தமிழர்களின் கவிக்காவியப் பரப்பு சங்க காலத்திற்கு அப்பால் இருந்து காலத்திற்கு காலம் கருத்துகளுக்கு ஏற்ப மறுமலர்ச்சிகளுக்கேற்ப மாறுபட்டு வந்திருப்பது உண்மை. தாய் நிலத்தில் நடப்பட்டிருக்கும் கவிதை நாற்றும் போற்றுதற்குரிய ஆற்றுப்படுத்தல் என்பது அசையாத உண்மை. காலந்தான் கடவுளையும் கருத்தையும் கனவான்களையும் உற்பத்தி செய்யும் என்ற கனவு மலர்ந்து இனிவரும் காலமெல்லாம் தாய்நிலமெல்லாம் இலக்கிய பொற்காலமாய் மலர இக் கவிதைத் தொகுப்பு வழிவகுக்கும் என வாழ்த்துகின்றேன்.

திருமதி. கலைவாணி ஏகானந்தராசா
கவிஞர், சங்கீத ஆசிரியர்
Erdgraben weg - 66
47652 Weeze, Germany